**தலைப்பு 322 – தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விவசாயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ)பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தினால முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது. அதன் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் இந்து அறிக்கையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது 21 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2019 மார்ச் 22 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அரச நிதித் திணைக்களத்தினால் வருடாந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்காக வழங்கப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அமைச்சு செயலாளர் இடமாற்றம் பெற்றமையாலும் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள முடியாமையாலும் இத்தாமதம் ஏற்பட்டதாக தெரிவித்துக் கொள்கின்றேன் |
| (ஆ) கட்டுநிதி ஒப்பீடொன்று இடம்பெற்றிருக்கவில்லை | சுற்றறிக்கையின் 09(‘ஃ பந்தியின் பிரகாரம் கட்டுநிதி இணககக்கூற்று தயாரிக்கப்பட வேண்டும் | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை |

### 1.6.2 நிதி செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திறைசேரி பிரதியின் பிரகாரம் திணைக்களத்தின் வருமானம் ரூபா 836,533,974 ஆக இருந்த போதும் நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானம் ரூபா 861,958,651 | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | அட்டுறு அடிப்படையில் தாவர பூங்கா வருமானத் தலைப்பிற்காக தயாரிக்கப்பட்டுள்ளதால் திறைசேரி கணனி |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்ட காரணத்தினால் வருமானத்தில் வேறுபாடு ரூபா 25,424,677 ஆக இருந்தது. | | குறிப்பின் பிரகாரம் தேறிய வருமானத்திற்கு 2017 திசெம்பர் 31 இன் வருமானம் 2018 சனவரி கணக்கீடு செய்யப்பட்டமை மற்றும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் வருமானம் 2019 சனவரி கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அதற்கு மேலதிகமாக வருமானத்திலிருந்து மீள்கொடுப்பனவாக கருதி 2018 ஆம் ஆண்டில் தேறிய வருமான சேகரிப்பு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானம் அல்லாத பெறுவனவுகளின் கீழ் திறைசேரி கட்டுநிதி,வைப்புக்கள், முற்பணங்கள் மற்றும் ஏனைய பெறுவனவுகள் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | வருமானம் அல்லாத பெறுவனவுகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | தவறுகள் சுட்டிக் காட்டப்பட்டதன் பின்னர் திருத்தப்பட்ட மாதிரி இணைப்பொன்றாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | ஏ.சீ.ஏ. 3 மாதிரியில் மொத்த கட்டுநிதி பெறுவனவு ரூபா 943,643,888 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது ரூபா 871,498,614 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய மாதிரிகளில் காண்பிக்கப்பட வேண்டிய பெறுமதிகள் சரியாக காண்பிக்கப்பட வேண்டும். | ஏ.சீ.ஏ. 3 மாதிரியில் கட்டுநிதி பெறுவனவாக பொது திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதி மற்றும் திணைக்கள வருமான தலைப்பிலிருந்து கிடைத்த வருமான தலைப்பிலிருந்து கிடைத்த வருமானம் மாத்திரம் எடுக்கப்பட்டிருந்தது. சுட்டிக் காட்டப்பட்டதன் பின்னர் திருத்தப்பட்ட மாதிரி இணைப்பொன்றாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றம் உபகரணங்களின் பெறுமதி ரூபா 467,915,465 என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் திறைசேரியின் அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் அது ரூபா 7,557,586,399 ஆக இருந்தமையால் ரூபா 7,089,670,933 ஆன வேறுபா டொன்று காணப்பட்டது. மேலும் திறைசேரியால் வெற்று சொத்துக்கள் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டமையால் சொத்துக்களின் சரியானதன்மை தொடர்பாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை |
| (ஆ) நிதி நிலைமை தொடர்பாக கூற்றில் முற்பணக் கணக்கின் மீதி ரூபா 81,704,540 ஆக இருந்த போதும் திறைசேரியின் அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் அது ரூபா 80,069,532 ஆக இருந்தமையால் ரூபா 1,635,008 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய பெறுமதிகள் சரியாக காண்பிக்கப்பட வேண்டும். | முற்பணமாக 322-11 (பணமாக கொடுப்பனவு0 இன் கீழ் மீதியான ரூபா 81,704,536 ஆக இருந்தது. |

### 1.6.4 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கட்டுநிதி பெறுவனவு ரூபா 35,000,000, வைப்புக்கள் ரூபா 35,199,078 மற்றும் ஏனைய வருமானம் ரூபா 20,225,429 தொகை மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் கீழ் காசுப் பெறுவனவாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காசுச் பாய்ச்சல் கூற்றில் மீளாய்வாண்டில் காசு உட்பாய்ச்சல் மற்றம் வெளிப்பாய்ச்சலை சரியாக காண்பிக்கப்பட வேண்டும். | ஏசீஏ-சீ மாதிரியன் காசுப் பாய்ச்சல்கூற்றில் தொழிற் பாட்டுச் செயற்பாட்டின் கீழ் பணப் பெறுவனவாக கட்டுநிதி, வைப்புக்கள் மற்றம் ஏனைய வருமானத் தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்படா திருந்தமையால் அவை உள்ளடக்கப்படாதிருந்தது டன் அரச கணக்காய்வுப் பிரிவினால் சுட்டிக் |

| | | | |
|---|---|---|---|
| | | | காட்டப்பட்டதன் பிரகாரம் சரிசெய்யப்பட்டு இதனுடன் சமர்ப்பிக்கின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கபபட வேண்டிய போதிலும் ரூபா 35,644,699 ஆன முற்பணக் கொடுப்பனவு மாத்திரம் நிதிச்செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன. | முற்பணப் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு சரியாக காண்பிக்கப்பட வேண்டும். | கணக்காய்வுப் பிரிவினால் சுட்டிக் காட்டப்பட்டதன் பிரகாரம் சரி செய்யப்பட்டு இதனுடன் சமர்ப்பிக்கின்றேன். |

## 1.6.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 375,704 ஆன முற்பண மீதி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆவது பிரிவில் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சில கடன் மீதிகளை கணக்குப் பொழிப்பு மற்றும் மரண பணிக்கொடை மூலம் அறவிடுவதற்கும் அறவிட முடியாத கடன்மீதிகளை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ஓய்வுபெற்ற 04 உத்தியோகத்தர்கள் உட்பட தனிப்பட்ட கோவையின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்யப்படாமை அடிப்படையில் ரூபா 286,551 ஆன கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்காக கோவைகளின் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 ஆந் திகதி ஓய்வுபெற்ற 04 உத்தியோகத்தர்கள் உட்பட தனிப்பட்ட கோவையின் வேலைகள் முடிவடைந்தவுடன் எஞ்சிய ரூபா 286,551 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் |

### 1.6.6 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டிருந்ததுடன் காலத்திற்கு காலம் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் பலவீனங்கள் இனங்காணப்பட்டு அறிக்கையிடுவதற்கும் செய்யப்பட வேவண்டிய மேம்படுத்தல்களை பரிந்துரைப்பதற்கும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது இனங்காப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டில் சிக்கல்கள் உள்ள இடங்களை தீர்வு செய்வதற்கு திணைக்கள உள்ளக சுற்றறிக்கை 03 இல் விநியோகிகப்பட்டு உள்ளதாக தயவுடன் அறியத் தருகின்றேன் |
| (ஆ) வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேரத்தில் தயாரித்தல் இடம் பெறுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய போதிலும் அறிக்கையின் 1.6 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் காரணமாக அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும | திணைக்களத்தில் உள்ள பிரதான கணக்காளர் 2018 திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி ஓய்வுபெற்றமை மற்றம் புதிய தலைமை கணக்காளர் 2019 பெப்ரவரி மாதம் சேவைக்கு அறிக்கையிட்டமையும் எமது திணைக்களம் உரித்தான அமைச்சு வேறொரு அமைச்சொன்றுடன் ஒன்றிணைக்கப்பட்டமை காரணமாக பெப்ரவரி 28 ஆந் திகதியில் உள்ளவாறு வருடாந்த நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்க முடியாதிருந்த தாக தயவுடன் அறியத் தருகின்றேன். |

**1.6.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | அவதானிப்பு<br>பெறுமதி<br>ரூபா | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடிரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 571 | 3,943,168 | 02 ஆண்டுகளை மிகைத்த 09 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொது வைப்புக் கணக்கில் 02 ஆண்டுகளை மிகைத்த 25 வைப்புக்களில் 17 இதுவரை தற்போது தீர்வு செய்யப் பட்டுள்ளன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 643 | 1,091,475 | காலாவதியான மாதிரிப் பத்திரங்கள் தொடர்பாக திறைசேரியிடம் விசாரித்து பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் சீத்தாவக்க தாவரவியல் பூங்காவில் வெளிநாட்டு சுற்றுலா, சிறுவர் மற்றும் மாணவர் வகுதிக்குரிய 1488 நுழைவுச்சீட்டுக்கள் இருப்பொன்ற பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கூறுவிலைகள் திருத்தம் செய்யப்பட்ட பிரவேச சீட்டுக்கள் கைதவிர்ப்பதற்காக குழுவொன்ற நியமிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 செலவின விடயங்களுக்குரிய ரூபா 23.38 ஆன செலவனம் தாவரவியல் பூங்கா பொறுப்பு நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட காரணமாக அச்செலவின விடயங்களின் செலவினம், நிதிஏற்பாடு மிகைத்து இருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை. |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக 2019 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,917,114 மில்லியன் செலவினம் தொடர்பிலான பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்கள் கமூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | பொறுப்புக்களும் சரியான வெளிப்படுத்த வேண்டும். | நிதிக் கூற்றுக்களில் குறிப்பு (III) மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மிரிஜ்ஜவில தாவரவியல் பூங்காவில் 2006 ஆம் ஆண்டு முதல் பார்வையாளர்களின் வசீகரத்தையும் கல்வி நடவடிக்கைகளுக்குமாக பாலைவன மாதிரி கட்டமைப்பொன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் இதுவரை அதற்காக 12 ஆண்டுகள் காலம் கடந்திருந்த போதும் அது பூர்ததி செய்யப்படாமல் இருந்த போதும் அது பூர்த்தி செய்யப்படாமல் | செயற்திட்டத்தை எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்படும் வகையில் பயன்படுத்த வேண்டும். | பாலைவன மாதிரிக்கு தேவையான அதிகளவிலான கடல் மணல் அளவு கடற்கரையிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு கரையோர பாதுகாப்பு திணைக்கள்ம அனமுதி வழங்கவில்லைர. இந்த பாலைவன மாதிரி தற்போது பாலைவன தாவரங்களின் |

| | | |
|---|---|---|
| இருந்ததுடன் பேரீச்ச மரங்கள் மாத்திரம் அவ்விடத்தில் நடப்பட்டிருந்தன. | | தொகுப்பாக திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக பதொக் போன்ற தாவரங்களின் திரட்லும் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் போது தேவையான கடல் மண்ணின் அளவு முன்னைய விட குறைவாகும் இதற்காக தேவையான கடல் மண் மண் தற்போது கொள்வனவு செய்யப்பட் டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டில் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

### 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சீத்தாவக்க தாவரவியல் பூங்காவின் ரூபா 4.99 மில்லியன் மதிப்பீட்டிலான சேன் லின்க் வேலி நிர்மாண ஒப்பந்தம் இரண்டு பகுதிகளாக பிரித்து வெவ்வேறாக பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் ஒப்பந்தத்திற்குரிய பெறுகை மற்றும் தொழில்நுட்பமதிபீட்டுகுழுக்களின் இரகசிய கூற்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.4 (இ) மற்றும் 2.12 வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிர்மாணம் ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் எல்லைகள் தொடர்பாக சிக்கலொன்று உருவாகியதால் ரணவிரு உயன அருகிலான பகுதிக்கு வேறான சேன்லின்க் வேலியும் தேயிலை தோட்டப் பகுதிக்கு வேறாக சேன் லின்க் வேலியும் ஒரே இடத்தில் நிரமாணிக்கப்பட்டன 2018 ஆம் ஆண்டின் போது நிர்ணியக்கப்பட்ட மாதிரியில் மதிப்பீட்டுக் குழுக்களின் கூற்றுக்கள் பெறப்படாதிருந்தது டன் 2019 ஆம் ஆண்டில் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டு ள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஆ) மிரிஜ்ஜவெல உலர் வலய தாவரவியல் பூங்காவின் 2018 ஆம் ஆண்டிற்காக சாதாரண கூறுவிலை கோரல் நடைமுறை பின்பற்றாமல் 30 சந்தர்ப்பங்களில் ரூபா 965,769 ஆன அவசர கொள்வனவு மேற்கொள்ளப் பட்டிருந்தன. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த தாவரவியல் பூங்கா 300 ஏக்கர் விசாலமான புதிய பூங்காவொன்றாக இருப்பதால் வருடாந்த திட்டத்திற்கு புறம்பாக அவசர செலவினம் மேற்கொள்ள நேர்ந்தது. அச்சந்தர்ப்பங்களின் போது பணிப்பாளர் சபையினக் முன் அங்கீகாரம் இல்லாமல் அத்தியவசிய கொள்வனவு மற்றும் நிர்மாணங்கள் மேற் கொள்ளப்பட்டன |

## 3.3 நட்டம் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சீதாவாக்கை தாவரவியல் பூங்கா பார்வையிடல் நிலையம் நிர்மான ஒப்பந்தமானது கணக்காய்வு தினத்திற்கு நிர்மாணம் நிறைவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் தரமான மரப் பலகைகள் இல்லாததால், ஏராளமான மருத பலகைகள் சேதமடைந்து சிதைந்து இருந்தன. இதன் காரணமாக செலுத்தப்பட்ட ரூ .1.34 மில்லியன் தொடர்பாக கணக்காய்வன் போது திருப்தி அடைய முடியாதிருந்தது.. | மதிப்பீட்டின் அடிப்படையில் செயற்பாடுகள் சரியான விதத்தில் நிறைவு செய்ய்ப்பட்டுள்ளமை தொடர்பில் தொழிநுட்ப உதயோகத்தர் முறையாக கண்காணித்து சான்றுறுதிப்படுத்த வேண்டும். | அரச மரக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பலகைகள் பெற்றுக்கொண்டதுடன் மரத் தளங்களை நிறுவுவதற்கு முன்பு மரத்தின் மேற்பரப்பு பார்வையில் இருந்து மட்டுமே நிலைமையை ஆய்வு செய்த பின் கட்டிட பொறியியலாளரால் அனுமதி அளிக்கப்பட்டது. சரியான நேரத்தில் குறைபாடுகள் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அவிஸ்ஸவாளை தாவரவியல் பூங்காவின் ரனவிரு உயனவின் அருகில் ‘‘சேன்விங்க்’’ வேலி ஒன்றினை கட்டுவதற்கான அளவீட்டு பத்திரம் மற்றும் இறுதிப்பட்டியிலின் 03 ஆம் உருப்படியில் நிறைவேற்றப்பட்டிருந்த 1200 (Lft) நீள அடிக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பௌதீக பரிசோதனையின் போது 1,120.75 (Lft) நீள அடி அளவில் நிர்மாணிக்கப்பட்ட காரணமாக நிர்மாணிக்கப்படாத 79.25 (Lft) நீள அடிக்காக ரூபா 101,836 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கட்டணத்தை செலுத்த முன்பு செயற்பாடுகள் சரியான விதத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் தொழிநுட்ப அதிகாரி முறையாக கண்காணிக்க வேண்டும். | சிவில் பொறியிலாளரால் அளவீட்டு சந்தர்ப்பத்தில் 1200 அடி என உறுதிப்படுத்தப்பட்டதால் 1200 அடிக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வின் பின்னரும் சிவில் பொறியியலாளரால் மீண்டும் பட்டியலில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள அளவு சரியானதென உறுதிப்படுத்தப்பட்டது |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சீதாவக்கை ஈர வலய தாவரவியல் பூங்காவைச் சேர்ந்த சுமார் அரை ஏக்கர் வயல் நிலம் அத்துமீறிய குடியிருப்பாளரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது, மேலும் நிலத்தை கையேற்ப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | காணி தொடர்பான பிணக்கினைத் தீர்த்து பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். | அத்துமீரிய குடியிருப்பாளர்கள் தொடர்பில் தற்போது ஹங்வெல்லை பிரதேச செயலகத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ஆ) | ஹக்கல தாவரவியல் பூங்காவிற்கு ரூ 7,730,690 செலவில் 2016 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட கவிகை அடுக்குகளுடன் கூடிய ஜன்னல் மற்றும் கதவுகளுடன் கூடிய உத்தியோக பூர்வ இல்லமானது குளிர் கால நிலைக்கு ஏற்றவாறு நிர்மாணிக்கப்பட்டிருக்காமையால் அக் நிர்மாண வேகைள் பூர்த்தி செய்யப்பட்ட தினத்தில் இருந்தே பாவனைக்கு எடுக்கப்படவில்லை. | ஆய்வொன்றும் மேற்பார்வை மற்றும் முறையான கவனத்துடன் திட்டமிடலை மேற்கொள்ள வேண்டியதுடன் சொத்துக்களை அதிகபட்சம் பாவிக்க வேண்டும். | பகல் காலத்தில் குறிப்பிடத்தக்க வெப்ப நிலையுடன் காணப்படுகின்ற காலநிலையானது இப் பிரதேசத்தில் காணப்படுகின்றமையால் இவ்வாறு கவிகை அடுக்குகளுடன் கூடிய ஜன்னல்களைக் கொண்டிருப்பது அத்தியாவசிய அம்சம் என்பது பொறியியலாளரின் பரிந்துரையாகும். மேலும் தேவைப்படும் பொது இந்த |

| | | |
|---|---|---|
| | | கவிகை அடுக்குகளுடன் கூடிய ஜன்னல்களை கண்ணாடி போன்றவற்றினால் மறைக்கக் கூடிய வகையில் நிர்மாணிக்க முடியுமாகையால் பாரிய பிரச்சினை ஏற்படாது என்பதை தயவுடன் சுட்டிக் காட்டுகின்றேன் |

**3.5 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பேராதனை தாவரவியல் பூங்காவிற்கு உரித்தான கன்றுகள் விற்பனை நிலையத்தில் உள்ள பணப் பெறுவனவு இயந்திரத்தின் மூலம் 145 வகையான மூலிகைக் கன்றுகள் மற்றும் மற்றைய வெவ்வேறுபட்ட கன்றுகள் 17 இற்கும் மேற்பட்டவைகளுக்கு சரியான குறியீட்டு எண் இடப்பட்டு இருக்கவில்லை. அதன் காரணமாக இக் கன்றுகளுக்கு சமமான விலைகளைக் கொண்ட வேறு கன்றுகளின் குறியீட்டு எண்ணின் கீழ் பற்றுச்சீட்டு வழங்கப்படுவதால் விற்கப்படுகின்ற கன்றுகளின் அளவினை சரியாக கணக்கிடுவதற்கு இயலாமல் போய் உள்ளது. | ஒவ்வொரு கன்றுகளுக்கும் வெவ்வேறு குறியீட்டு இலக்கங்களை இடுதல் வேண்டும். | தற்போது தாவரவியல் பூங்காவில் பாவிக்கப்படுகின்ற பணப் பெறுவனவு இயந்திரமானது பூங்காவில் விற்கப்படுகின்ற எல்லா கன்றுகளையும் உள்ளடக்குவதற்கு தேவையான போதியளவு இயலாளவைக் கொண்டதல்ல. மேலதிக வசதிகளைக் கொண்ட இயந்திரமொன்றை விரைவில் கொள்வனவு செய்ததன் பின்பு மேற் கூறப்பட்ட சிக்கல்களை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ஆ) மீளாய்வாண்டில் ஜனவரியில் இருந்து ஜூன் மாதம் வரை விற்பனை நிலையத்திற்கு அனுப்பப்பட்ட கன்றுகளில் ரூ. 126,520 பெறுமதியான 3,355 கன்றுகள் அழிவடைந்து இருந்ததுடன் அவற்றை புத்தகங்களில் இருந்து அகற்றுவதற்கு | கன்றுகளை முறையாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அழிவடைந்துள்ள கன்றுகள் பற்றிய விபரங்களை புத்தகத்தில் இருந்து அகற்றுவதற்கு குழு ஒன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருப்பதுடன் அந் |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | | நடவடிக்கை நிறைவடைந்ததுடன் அழிவடையும் கன்றுகளை புத்தகத்தில் இருந்து அகற்றுவதற்காக செயற்படுவதாக தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (இ) | ஹக்கல தாவரவியற் பூங்காவினை பார்வையிட வருகின்ற வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக வெளிநாட்டு வளர்ந்தோருக்கான நுழைவுச் சீட்டுக்கள் 300,000 வழங்கப்பட்டு இருந்த போதிலும் இந்த நுழைவுச் சீட்டுக்கள் 10 வருடங்களுக்கு போதுமானதாக இருக்கும் என அவதானிக்கப்பட்டது. காலத்திற்குக் காலம் கட்டணம் திருத்தங்களுக்கு உட்படுவதால் இவ்வாறு அதிகளவிலான நுழைவுச் சீட்டுக்கள் அச்சிடுவதானது நடைமுறைக்குச் சாத்தியமற்ற ஒரு செயற்பாடாகும். மேலும் நுழைவுச் சீட்டுக்களுக்கான அவசியம் பற்றிய கேள்வி இன்றி பேராதனை தாவரவியற் பூங்காவிற்கு நுழைவுச் சீட்டுக்கள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்தது. | அன்றாடம் விற்கப்படுகின்ற நுழைவுச் சீட்டின் அளவினைக் கவனத்திற் கொண்டு பூங்காவிற்கு நுழைவுச் சீட்டுக்கள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருடாந்தம் ஹக்கல தாவரவியற் பூங்காவினை பார்வையிட வருகின்ற வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கவனத்திற் கொண்டு எதிர்வரும் வருடத்திற்கு தேவைப்படுகின்ற வெளிநாட்டு வளர்ந்தோருக்கான நுழைவுச் சீட்டுக்களின் அளவிற்கு 50000 நுழைவுச் சீட்டுக்களை வைத்துக் கொண்டு மிகுதி 250000 நுழைவுச் சீட்டுக்களை பேராதனை தாவரவியற் பூங்காவில் விற்பனை செய்வதற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ஈ) | நாரஹேன்பிட்ட (கொழும்பு) உதவிப் பணிப்பாளர் காரியாலயத்திற்கு சொந்தமான 56-5389 இலக்கம் உடைய வாகனம் 2015 ஒக்டோபர் 17 ஆம் திகதி அன்று சாரதி கவனமின்மையுடன் வாகனத்தை செலுத்தி யதால் விபத்துக்குள்ளாகி இருந்தது. அதன்படி நி.பி 104 (04) அறிக்கையின் படி ரூபா 151,700 நட்டம் ஏற்பட்டதுடன் நூற்றிற்கு 10 வீதம் மாத்திரமே சாரதியிடம் இருந்து அறவிடப்பட்டது. | பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து நட்டத்தை அறவிட வேண்டும். | குறிப்பிட்ட விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் சாரதி இராஜாதந்திர வெளிநாட்டு அதிகாரிகளுடன் 02 நாட்கள் நீண்ட பயனமொன்றுக்கு சென்று மிகக் களைப்படைந்து இருந்ததாக அவதானிக்கப்பட்டமையால் வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்து நூற்றுக்கு 10 வீதம் அறவிடப்பட்டுள்ளது. சாரதிகளின் பற்றாக்குறை காரணமாக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கின்ற தொழிலாளர் ஒருவரை அவரின் |

| | | |
|---|---|---|
| எவ்வாறாயினும் வாகனத்திற்கான காப்புறுதி சான்றிதழ் மற்றும் மோட்டார் வாகன வரி அனுமதிப் பத்திரம் என்பவற்றை பெற்றுக் கொள்ளாமை, சாரதிச் சேவையில் தொழிலாளர் ஒருவரை ஈடுபடுத்தியமை தொடர்பில் பொறுப்பான அதிகாரிகள் தொடர்பில் எடுத்த நடவடிக்கை தொடர்பில் திருப்தியடைய முடியாதிருந்தது. | | விருப்பத்துடன் வாகன ஓட்டுநர் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். குறிப்பிட்ட வாகனத்திற்கான வாகன வரி அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரத்தை பெறாதிருந்த சந்தர்ப்பத்தில் வாகனத்தை செலுத்தியமை தவறு என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மலர் செய்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் நடவடிக்கை தொடர்பில் அலுவலகத்தின் தொலை நோக்கு, நோக்கங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப 08 இலக்குகளின் கீழ் 17 உப இலக்குகளை அடையாளங் காண வேண்டி இருந்த போதிலும், 03 இலக்குகள் மற்றும் உப இலக்குகள் 05 உம் அடையாளங் காணப்பட்டு இருந்தது. மேலும் இந்த நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் அதிகாரிகள் அறிந்திருத்தல் போதுமானதாக இருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும். | மலர் செய்கை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவிற்காக அடையாளங் காணப்பட்ட 08 இலக்குகள் 03 இலக்குகளின் கீழ் 05 உப இலக்குகள் அடையாளங் காணப்பட்டு செயற்படுத்தப்படுவதுடன் எஞ்சிய இலக்குகளும் உரிய காலத்தில் நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பூங்காக்களின் நடவடிக்கைகள் முறையாக மற்றும் சரியாக நடாத்திச் | துரிதமாக வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். | சிரேஷ்ட மட்டத்தில் உள்ள 17 பதவிகள் விஞ்ஞான சேவையின் ஆட்சேர்ப்பு ஆக இருந்ததுடன்ம மேலும் |

| | | | |
|---|---|---|---|
| | செல்வதற்கு சேவை அவசியமான போது அடையாளங் காணப்பட்டு தேவையான சந்தர்ப்பத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டி இருந்த போதிலும் மீளாய்வாண்டு நிறைவடைகின்ற போது 275 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | | தாமதத்திற்கு வழக்கு ஒன்று இருந்து அது தள்ளுபடி செய்யப்பட்டமையே காரணம் ஆகையால், ஆட்சேர்ப்பானது இந்த வருடம் செய்யப்பட முடியும் மற்றும் மூன்றாம் நிலை வெற்றிடங்களானது பூங்கா உதவியாளர்கள் ஆகும் என்பதுடன், தற்போது அதற்கான நேர்முகப் பரீட்சையை நிறைவு செய்து அரச சேவை ஆணைக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br>இரண்டாம் நிலையில் உள்ள வெற்றிடங்களானது பரீட்சைத் திணைக்களத்தின் ஊடாக பரீட்சைகள் நடாத்தப்பட்டு திறமையின் அடிப்படையில் பெயர்ப்பட்டியல் பெறப்பட்டு தற்போது நியமனம் வழங்கப்பட்டுள்ளது.<br>முதனிலை மட்ட பதவிகளில் 150 இற்கு அண்மிய பதவி எண்ணிக்கைகளுக்கு 2018 ஆம் ஆண்டில் ஆட்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.<br>பெற்றரி கார் செயற்பாட்டாளர் பதவிக்கு 19 பேர் ஆட்சேர்க்கப்படுவதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறை தயார் செய்யப்பட்டு நிறைவுறுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | மிரிஜ்ஜவில தாவரவியற் பூங்காவின் தொழிநுட்ப தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் இருவருக்கு 10 வருடங்களுக்கு முன் சேர்க்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட 02 வார குறைந்த அடிப்படை பயிற்சியைத் தவிர வேறு எந்த பயிற்சிகளும் வழங்கப்படவில்லை. | திணைக்களத்தின் அதிகாரிகளின் அறிவு மற்றும் திறமை வளர்ச்சிக்கு தேவையான பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும் | இந்த பிரிவின் அதிகாரிகள் மற்றும் தொழிலாளர் களுக்கான அத்தியாவசிய பயிற்சிகளை அடையாளங் கண்டு அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன். |